**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.121/2013</u>** **<u>தேதி</u>**.05.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. கலைவாணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 05.02.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | | திரு.கணேஷ் ராவ் |
| த/பெ. | | திரு.லஷ்மண் ராவ் |
| வயது | | 56/2026 |

துவக்க நேரம் 3.45 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. பாகப்பிரிவினை வழக்கின் நான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த வாதி, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் என் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். பாக வழக்கில் உள்ள மற்ற 4,5 மற்றும் 6பிரதிவாதிகள் இறந்துபோன எனது சகோதரர் குமார் ராவ் என்பவரின் மனைவி மற்றும் குழந்தைகள் என்றால் சரிதான்.

2. 7ம் பிரதிவாதியானவர் 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். என் தந்தை லஷ்மண ராவ் எந்த வருடம், எந்த இடத்தில் இறந்தார் என்றால் கடந்த 1996ல் இராணிப்பேட்டையில் இறந்தார். இராணிப்பேட்டைக்கு எனது தந்தை எந்த வருடம் வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. இறந்துபோன எனது சகோதரர் குமார் ராவ் கிருஷ்ணகிரியில்தான் இறந்தார் என்றால் இல்லை, இராணிப்பேட்டையில்தான் இறந்தார். எனது தந்தையார் ஆரணி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் வியாபாரம் செய்து

வந்தார் என்ற விவரத்தை எனது எதிர் வழக்குரை, பிரமாண வாக்குமூல ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தந்தையாருக்கு திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான்.

4. எனது தந்தையாருக்கு பூர்வீகம் ஆரணி என்றால் சரிதான். எனது தந்தையார் ஆரணயில்தான் மனைவி, மக்களுடன் பூர்வீகமாக வசித்து வந்தார் என்றால் இல்லை, இராணிப்பேட்டையில்தான் வசித்து வந்தார். ஆரணியில் உள்ள சில பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு, வெளியிடங்களில் சொத்துக்களை வாங்கினார் என்றால் ஆரணியில் இருந்த பூர்வீக சொத்தை விற்றுவிட்டு கிருஷ்ணகிரியில் வீடு வாங்கினார்.

5. எனது அப்பாவிற்கு ஆரணியில் இருந்த சொத்து அவரது பூர்வீக சொத்தா, அவர் சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் எனது தந்தையாருக்கு பாகப்பிரிவினையின் மூலமாக வந்த சொத்து.

ஆவணங்கள் பரிசீலிக்கவேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்க வேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 4.05 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.